1975 அக்டோபர் 23]

மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற புதிய முறைகளை விவசாயிகள் எவவாறு அறிந்து செயற்படுத்துகிருர்கள் என்பதைப் பற்றித் தான் குறிப்பாக அவர்கள் பார்வையிட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து அங்கிருந்து வந்த நிபுணர் மாடல் பார்ம்ஸ் அங்கு வைத்திருப்பதாகவும் அதே முறையை இங்கே கையாள வசதி யிருக்கிறதா என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதாகத் தெரி வித்தார்கள். அந்த வகையில் இங்கே மாவட்டத்திற்கு ஒரு மாடல் பார்ம் ஆரம்பிப்பதற்கான திட்டமுண்டா? அரசுப் பண்ணை ஆரம்பித்திருக்கிருர்களே. அவற்றை மாடல் பார்ம்ஸ் ஆக மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அரசுப் பண்ணையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாதிரிப் பண்ணையை, மாடல் பார்ம்ஸை, நடத்தலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் யோசனை சொல்லியிருக்கிருர்கள். அதை வேளாண்மைத் துறை ஆராய்ந்து பார்த்து கூடியவரையில் அதை நடைமுறைப்படுத்த எண்ணம் இருக்கிறது.

விவசாயிகளுக்குப் பரிசுத் திட்டம்

* 17 வின—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விணுவுக்கு விடையளிப்பாரா—

சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய புஞ்சை தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சிறப்பு பரிசுத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : கழக ஆட்சிக்குப் பிறகுதான் பசுமைப் புரட்சி என்று பல புதுமைகளைச் செய்து கருணு, காவிரி, காஞ்சி போன்ற பெயர்களை நெல்மணிகளுக்கு வைத்து ஒரு சிறப்பை உருவாக்கியது. அதேபோல் புன்செய் தானியங் களான சோளம், கம்பு போன்ற தானியங்களுக்கும் இப்படிப் பட்ட பெயர்களை வைத்து விவசாயிகளை அரசு உற்சாகப் படுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நான் ஏற்கனவே சொன்னபடி இது பெயர் வைப்பதல்ல. இது பரிசு. வேளாண்மை செம்மல் என்பது பட்டம். அது தவிர பணம் ஏறத்தாழ இரண்டாயிரம் ரூபாய் அளவிற்குக் கொடுத்து வருகிறோம். எந்த ஒரு விவசாயி அதிகப்படியான விளைச்சலைக் காண்பிக்கிறார்களோ அவர்களை உற்சாகப்படுத்துகிற வகையில், ஊக்கப்படுத்துகிற வகையில் நாம் பரிசு கொடுத்து வருகிறோம். அது நெல் என்ற வகையில் மிகச் சிறப்பாக எல்லா மாவட்டங்களிலும் நன்கு நடந்து வருகிறது. அதேபோல் புன்செய் தானியங்களுக்கும் இவ்வாறு பரிசு கொடுக்கலாமா என்ற திட்டத்தை இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைச் செய்யலாம் என்று கருதுகிறோம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any scheme for giving prizes to persons growing horticultural crops in the State ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : சோளம், கம்பு, கேழ்வரகு பற்றிய கேள்வி இது. அவர்கள் பழவகைகள், கிழங்கு வகைகள் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : புன்செய் தானியங்கள் மட்டுமல்ல, நன்செய் தானியங்களில் கூட தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் அது வராது.

Housing Board Unit in Kanyakumari district.

* 18 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Housing Board Sub-Division Office for Kanyakumari district is not functioning within Kanyakumari district ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தின் பணிகளை மேற்கொள்ளும் உட்கோட்ட அலுவலகம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் அமைக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில்